RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2433

# மருதத்திணையில் தலைவியின் கூற்றுகளும் உவமைகளும்

பொ. அருள் [அ, *]

[அ] தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, திருச்செங்கோடு-637205, தமிழ்நாடு, இந்தியா.

# Parables in Maruthathinai

P. Arul [a, *]

[a] Department of Tamil, Vivekanandha College of Arts and Science for Women, Tiruchengode-637205, Tamil Nadu, India

* Corresponding Author:
aruledu083@gmail.com

Received: 26-02-2024
Revised: 30-06-2024
Accepted: 05-07-2024
Published: 17-07-2024

Check for updates

**ABSTRACT**

Nature evolved in every action of an ancient man who lived as part of nature and harmony with nature, all these are recorded in Sangam literature. Among them, the people of Marutham have lived in harmony with nature. In Sangam literary Marutha thinai songs, the heroine's statement is more than the number of other statements. Among the Sangam literature chiefs in the Marutha section, the first and most important material belonging to the Marutha section is illustrated. It is to explore the richness of life, love and sense of beauty embodied through the statement of the protagonist. This is the objective of this article. The historical records of small land kings and kings of the Sangam period can also be known in the heroine's statement. Through this article it can be felt that the heroine has expressed more suffering through songs in her chaste state than in her adultery.

**Keywords:** Marutham, Thinai, Sangam literature, Parables

## முன்னுரை

சங்க இலக்கியங்களின் வனப்பிற்கும் செல்வாக்கும் அடிப்படையான இயற்கையோடு இயந்த வாழ்க்கை குறித்த பதிவுகளை இயற்கை சமூகத்தின் அங்கமாக வாழ்ந்த பண்டைய மனிதனின் ஒவ்வொரு செயலிலும் இயற்கை பரிணமித்தது. அவற்றுள் மருதத் திணையில் மக்கள் இயற்கையோடு மிகவும் இணக்கமுற வாழ்ந்துள்ளனர். அவர்தம் வாழ்வியல் வளமும் காதலும் அழகு உணர்வும் பொதிந்த தன்மையை தலைவியின் கூற்றன் வாயிலாக ஆராய்வதே, இக்கட்டுரையில் நோக்கமாகும்.

## மருதத் திணை சமூகம்

திணை சமூகம் என்பது இயற்கை வளங்களுடன் பின்னிப்பிணைந்து காதலையும் வீரத்தையும் பேணிய சமூகம் வாழும் பகுதியில், நிறைந்திருந்த இயற்கை கூறுகள் மனிதர்களின் வாழ்வியலை வெகுவாக பாதித்தன ஏறக்குறைய இயற்கை கூறுகளின் கட்டளைப்படி மனிதன் வாழ்வான் எனலாம் அவ் அடிப்படையில் மருதம் நீங்களான நான்கு நிலத்தோர்கள் இயற்கையை அதன் நிலையிலே எதிர்கொண்டு வாழ்ந்தார்கள் மருத நிலத்தவர் மாத்திரம் இவர்களில் இருந்து விலகி நின்று காடுகள் ஒன்று கழனி சமைத்து பயிர் விளைவித்து நிலம் பதிக்கினர் இதிலிருந்து மருதநில மக்களின் தனித்துவத்தினை அறியலாம் மருதத் திணையின் நீர் வளமே ஆக திணையின்

வளர்ச்சிக்கு அடிப்படையாகும் அவ்வகையில் மருதநீர் நிலை குறித்த செய்திகள் இந்தப் பாடலில் மிகுதியாக உள்ளன.

## மருத நிலம்

மலைக்கும் கடலுக்கும் இடைப்பட்ட காட்டுப் பகுதியை மருத நிலமாகும் பல்வகை பயிர் வகைகள் வளர்ப்பதற்கு ஏற்ற நிலவளமும் நீர் வளமும் கொண்டதோடு மக்கள் மிகுதியாக வாழ்கின்ற இடமும் இதுவே ஆகும் ஆதலால் மருத நில ஊர்களை சுற்றிலும் வயல் பரப்புகளு காணப்படுவதால் அவற்றில் நெல் முதலிய தானியங்கள் விளைந்தனஅதனால்இதனை nkன்புலம் (புறம்42) என்று புறநானூறு கூறுகிறது. மருத நில கடவுள் இந்திரன், இந்நில தலைவர்கள் ஊரன், மகிழன் என சிறப்பிக்கப்பட்டனர், மற்ற மக்கள் உழவர், உளத்தியர், கடையர், கடைசியர், என்று அழைக்கப்பட்டனர்.

## மருதத் திணையில் தலைவி கூற்றுக்கள்

சங்க அக இலக்கியங்களில் மருதத் திணையில் தலைவியின் கூற்றாக அமைந்த பாக்களின் எண்ணிக்கை 101 ஆகும். இவை நற்றிணையில் 7, குறுந்தொகையில் 22, ஐங்குறுநூற்றில் 40, கலித்தொகையில்21, அகநானூற்றில்11, என அமைந்துள்ளன தலைவி கூற்றுப்பாக்களில் உவமைகள் கொண்ட அமைந்துள்ள 85 பாடல் காணப்படுகின்றன அக இலக்கியங்களில் மருதத்திணைப் பாடல்கள், களவு பாடல்கள் 8, கற்பு பாடல்கள் 93 ஆகவும் காணக் கிடைக்கின்றன இவை அளவில் இன்ப நிலைப்பாடல் என்றும், கனவில் துன்ப நிலைப்பாடல் என்றும், பிரித்தறியப்படுகின்றனர்.களவில் இன்பநிலை பாடலில் அமையப்பெறவில்லை களவில் துன்பத்தில் பாடும் பாடல்கள் 8பாடல்களும் கற்பில் இன்ப நிலையில் 1 பாடலாகவும் கற்பில் துன்ப நிலையில் 92 ஆகவும் அமைந்துள்ளன.

## நற்றிணையில் தலைவி நாரையிடம் சொல்லாடல்

தலைவி வரைதல் வேட்கை கொண்டு யாரிடம் கூறுவதான இப்பாடலில்

"சிறுவெள்ளாங் குருகே! சிறுவெள்ளாங்குருகே!

துறைபோக அறிவை தூண் அடி அன்ன

நிறம் கிளர் தூவி சிறு வெள்ளாங்குருகே!" (நற்-70:1-3)

என்னும் உவமை அமைந்துள்ளதுசிறு வெண்மையான குருகு பறவையே! சிறிய வெண்மையான குருவு பறவையே! நீர் துறைகளில் துவைத்து வெளுத்த தூய ஆடை போன்ற வெண்மையான குறுக்கே! என்று குறுகின் நிறத்திற்கு உவமை கூறப்பட்டுள்ளது. குரு என்று வழங்கும் சங்க இலக்கியப் பறவை, தற்கால கூழைக்கடா என்று அழைக்கப்படுகிறது, என்று பி எல் சாமி2 குறிப்பிடுகிறார்.

"குருகு உடைத்து உண்ட வெள்அகட்டு ஆமை" (ஐக்:81)

என மேற்காட்டிய பாடல் மூலம் குபகு மீனை மட்டும் உண்பதில்லை ஆமை போன்ற பெரிய உயிரினங்களை உண்ணும் என்பது தெளிவாகிறது. ஆமையின் வயிற்றுப் பகுதியை குபக உடைத்து உண்பதற்கு ஏற்ப இதன் அழகு மீண்டும் உறுதியாகவும் காணப்படும் என்பதை உணர முடிகிறது. குள்ளமான பருமனான பறவை இதன் மூக்கு கொல்லன் உழைமூக்கு போல் இப்ப பறவையின் மூக்கு காணப்படும். அழகு நீண்டு பெரியதாக இருக்கும் கீழழகு தொங்கிய தோற்பை போல காணப்படும். உடல் வெண்மை நிறமாக இருக்கும் கால் விரல், இடையில் சவ்வு தோள் காணப்படும் என்று மேற்கத்திய விளக்கங்களை பறவை நூல் தருகிறது மேற்கண்ட உவமைகளில்

இடம்பெற்றுள்ள உருது கழனி என்ற கருப்பொருள் மருத நிலத்தை குறிக்கிறது இதில் மருதj;Jf;Fupacupg;nghUs; இல்லை என்பது குறிப்பிடத்தக்கது

## குறுந்தொகையில் தலைவி தோழியோடு சொல்லாடல்

கனவில் குறுந்தொகையில் தலைவி கூற்றில் அமைந்த துன்ப பாடல்கள் எட்டு ஆகும் பூப்பெய்திய தலைமகள் தோளிடத்தில் கூறியது

“குக்கூ என்றது கோழி; அதன் எதிர்

துட்கென்றன்று என் ததூஉ நெஞ்சம்-

தோல் தோய் காதலர் பிரிக்கும்

வாள்போல் வைகறை வந்தென்றால் எனவே” (குறுந்.157:1-4)

குக்கூ வென்றது கோழி! அதற்கு நேரே எனது தோலை மணந்த தலைவரை பிரியச் செய்யும் வாலை போல் விடியல் பொழுது வந்தது என்று தனது மாசற்ற நெஞ்சம் அச்சத்தை உடைந்தது என்று தலைவி பூப்பு தோன்றியமையை மறைபொருளாக கூறுகிறாள். பூப்பு காதலை இருவரையும் வேறுபடுத்ததற்கு புறப்படுதலால் பூப்பு வாs; போன்றதாக உபயோகிக்கப்பட்டதுஇப்பாடலில் இடம் பெற்றுள்ள மனையுறை கோழி என்ற கருப்பொருளும், வைகறை என்ற முதற்பொருளும், மருத நில பின்னணி ஆகும்.வரை விட ஆற்றால் என கவன்ற தோழிக்கு தலைமகள் சொல்லியதில்

“கான் இனி வாழி-தோழி-யாணர்க்

கடும் புனல் அடைகரை நெடுங்கயத்து இட்ட

மீன்வலை மாபட்டா அங்கு

இது மற்று எவனோ,நொதுமலர் தலையே?” (குறுந்171:1-4)

என்னும் உவமையை கையாளுகிறாள்

புது வெள்ளம் பாயும் போது உண்பதற்குரிய மீன் சிக்குவதற்காக இடப்பட்ட வலையில் உண்பதற்கு ஆகாத நீர்நாய் அகப்பட்டார் போல தன் நலம் தலைவனுக்கு ஆகாமல் நொது மலர் பிறரால் துயிக்கப்படுவதற்கு உரித்தாகி விடும் என்று பூமிக்கப்படுகிறது.இதில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்நாய் மருதத் திணையில் வாழும்விலங்கினங்களில் ஒன்றாகும் தற்காலத்தில் நீர் நிலைகளில் அரிதாக காணப்படும். இதனை சங்கப் புலவர்கள் தெளிவாக கண்டு தமது பாடல்களில் பதிவு செய்துள்ளனர் வரைவு நீட்டித்த இடத்து தலைமகள் தோழிக்குச் சொல்லியதில்

“ஊர் உன் கேணி உன் துறை தொக்க

பாசி அற்றே பசலை-காதலர்

தொடுவுழி தொடுவுழி நீங்கி

விடுவுழி விடுவுழி பறத்தலானே (குறுந் 399:1-4)

என்ற உவமை அமைந்துள்ளது.

பாசி படிந்த நீர் உண்பதற்கு பயன்படாமை போல பசலைப் படர்ந்த தலைவியின் மேனியும் தலைவனுக்குப் பயன்படாமையைக் குறிப்பிடுகிறது.

“தலைவி தன்னுள்ளே ஆற்றாமை தோன்ற கூறியJ

உயர்த்துனர் விடாஅர் பிரித்து இடைக் கலளயார்

குப்பை கோழி தனி போர் போல

கலைவோர் இலை-யான் உற்ற நோயே" (குறுந்:305:5-7)

இன்னும் உவமையைப் பயன்படுத்தி உள்ளாள். குப்பையில் மேய்ந்து கொண்டிருக்கும் கோழிகள், தாமே தனிமையில் நிகழ்த்தும் ஓரினைப்போல அதுவாக முடியும் காலத்தில்முடிதல் அன்றி தலைவியின் நோயை கலைபவர் யாரும் இல்லை என்று உவமை கூறுவதாக அமைந்துள்ளது மேற்கண்ட உவமையில் இடம்பெற்றுள்ள குப்பை கோழிகள் மருத நிலத்துக்குரியதாகும்

## கற்பு பாடல்கள்

சங்க அக இலக்கியங்களில் கற்பு பாடல்கள் 93 ஆகும் இவை கப்பில் இன்ப நிலையில் பாடுவதாக ஒரு பாடலும் துன்ப நிலையில் பாடுவதாக 92 பாடல்களும் அமைந்துள்ளன நற்றிணையில் ஆறு பாடல்களும் குறுந்தொகையில் 15 பாடல்களும் ஐங்குறுநூற்றில் 40 பாடல்களும் கலித்தொகையில் 12 பாடல்களும் அகநானூற்றில் 10 பாடல்களும் என அமைந்துள்ளன

## கற்பில் இன்ப நிலை பாடல்கள்

அகநானூற்றில் ஒன்று பாடல் தலைவி இன்பத்துடன் பாடுவதாக அமைந்துள்ளது

## தலைவி தோழியோடு சொல்லாடல்

அகநானூற்றில் தலைவி கர்ப்ப நிலையில் பாடும் பாடல் தலைவி தோழியோடு சொல்லாடுவதாக அமைந்துள்ளனதலைமகள் தோழியை வாயில் வேண்டி அவளால் தான் வாயில் பெறாது ஆற்றாமையை வாயிலாக புக்கு கூடிய தலைமகன் நீக்கத்துக்கண் புக்க தோழிக்கு தலைமகள் சொல்லியதில்

"கோண முள் முள்ளி குவிகளை கலன்ற

மீன் முள் அன்ன வெண் கால் மா மலர்

பொய்தல் மகளிர் நிலவு அணி கூட்டும்" (அகம்:26:1-3)

என்பதில் உள்ளுறை அமைந்துள்ளது பருவம் காரணமாக தாமே கலன்று விழும் நீர்முள்ளியின் மலர்களை விளையாட்டு மகளிர் தமது விழாவிற்கு அழகு சேர்ப்பதாக பொறுக்கி சேர்ப்பது போல தலைவியின் பருவம் காரணமாக பற்றுழிந்துள்ள தலைவனை பரத்தை மகளிர் கை கொண்டனர் என்பது உள்ளுறுத்து சொல்லப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள நீர் முள்ளிச்செடி மருத நிலத்தில் வளரும் ஒருவகை முசட்செடி இதன் மலர்கள் மீன் முள்ளினைப் போன்று மென்மையான காம்புகளை உடையது என்று உவமை கூறப்பட்டுள்ளது.

## நற்றிணையில் தலைவி தலைவனுடன் சொல்லாடல்

நற்றிணையில் தலைவி தலைவருடன் கூட்டணி நிகழ்த்துவாராக நான்கு பாடல்கள் அமைந்துள்ளன இதில் நான்கு பாடல்களிலும் உவமைகள் அமையப் பெற்றுள்ளன

"செறி தொடி தெளிர்ப்ப வீசி மறுகில்

பூப்போல் உண் கண் பெயர்ப்ப நோக்கி" (நற்20:5-6)

பரத்தையில் பிரிந்து வந்த தலை மகன் யாரையும் அறியேன் என்றபோது தலைவி அவனிடம் உன்னுடைய இளைய பரத்தையின் மார்பில் நேற்று தூங்கி பின் வண்டுகள் பாயும் வெண் கடம்பின் பூங்கொத்துகள் கமழும் கூந்தல் விளங்கிய வகையில் அசைந்தும் இடையில்

கட்டிய உடை சரியவும் நெருங்கிய வளை ஒலிக்கவும் பூப்போன்ற கண்கள் பெயர்ந்து நோக்கியும் நம் தெருவின் வழிசென்றனர் என்று பரத்தையும் கண்களுக்கு பூவினை ஒப்புமைப்படுத்தி கூறப்பட்டுள்ள

## முடிவுரை

சங்க இலக்கிய மருதத் திணை பாடலில் தலைவியின் கூற்றாக அமைந்த சங்கப்பாடல் எண்ணிக்கை மற்ற மாந்தர்களின் எண்ணிக்கை விட தலைவியின் கூற்று அதிகமாகவே காணப்படுகின்றன. மருதத் திணை பகுப்பில் அமைந்த சங்க இலக்கிய தலைவி கூற்று பாக்களில் மருதத் திணைக்குரிய முதல், கரு உரிப்பொருட்களை உவமையிலாக அமைய பெற்றுள்ளது. இந்த மருத நிலத்தினை தன் வாழ்விடமாகக் கொண்ட தான் சார்ந்த நிலப்பகுதியை பின்னணியாக கொண்டே உவமைகள் கூறியுள்ளார். சிறிய அளவில் மரபு மாற்றங்கள் மிகுந்துள்ளதையும் இங்கு உணர முடிகிறது. சங்ககால குறுநில மன்னர்கள் மற்றும் அரசர்களுடைய வரலாற்று பதிவுகளையும் தலைவி கூற்றுகளாக அறிய முடிகிறது. தலைவி களவு காலத்தில் விட கற்பு நிலையில் அதிகமான துன்ப பாடல்கள் முலம் வெளிப்படுத்தி உள்ளார் என்பதை இக்கட்டுரையின் வழி உணர முடிகிறது.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License